நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, **L.L.M.,**

நீதித்துறை நடுவர், மேலூர்

**2026** ஆம் ஆண்டு மார்ச் மாதம் **09-**ஆம் நாள் திங்கள்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்**.81/2016**

**CNR.No. TNMD16-000442-2016**

...

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக சார்பு ஆய்வாளர்<br>மேலூர் காவல்நிலையம்<br>குற்ற எண்.4/2016 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | விஜயகுமார், (45/2026)<br>த/பெ.முருகேசன்,<br>14A அண்ணா காலனி, மேலூர் - திருச்சி மெயின்ரோடு, மேலூர் தாலுகா, மதுரை மாவட்டம். |
| குற்றம் முறையிடப்பட்டது | : | எதிரி மீது பிரிவுகள் 447, 294(b), 506(ii) இ.த.ச. |
| குற்றம் வனையப்பட்டது | : | எதிரி மீது பிரிவுகள் 447, 294(b), 506(ii) இ.த.ச-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன. |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்டநாள் | : | 03.01.2016 |
| இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | : | 17.08.2016 |
| பல்வகை மனு மற்றும் அதன் முடிவு | : | U/s.311 Cr.P.C in Crl.M.P.No.5603 of 2018 = Allowed. |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | : | |

| | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 10.04.2018 | 29.09.2025 |
| PW2 | 10.04.2018 | 29.09.2025 |
| PW3 | 10.04.2018 | 10.04.2018<br>29.09.2025 |
| PW4 | 10.04.2018 | Nil |
| PW5 | 10.04.2018 | 29.09.2025 |
| PW6 | 15.10.2018 | 06.02.2026 |

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.09 06:11:10 +0530

| | | |
|---|---|---|
| குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளை விசாரித்த நாள் | : | 13.02.2026 |
| தலைமறைவான எதிரியின் விபரம் மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம் | : | Nil |
| மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | : | Nil |
| தீர்மானம் | : | எதிரி பிரிவுகள் 447, 294(b), 506(ii) இ.த.ச-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானம். |
| தீர்ப்பு | : | முடிவாக, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 447, 294(b), 506(ii) இ.த.ச-ன் கீழான குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி பிரிவுகள் 447, 294(b), 506(ii) இ.த.ச-ன் கீழ் குற்றாவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் எதிரி குவிமுச பிரிவு 437(A)-ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும். |

இவ்வழக்கானது கடந்த 18.08.2016-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 05.03.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.பகவத்சிங் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.09 06:11:14 +0530

<u>தீர்ப்புரை :-</u>

எதிரி மீது பிரிவுகள் 447, 294(b), 506(ii) இ.த.ச-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன.

**1)** <u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u> **:**

இவ்வழக்கின் வாதி ஹலிபுல்லாவின் நண்பர் ஜமாலியா முகமது முக்ரின் என்பவரின் இடத்தை எதிரி 01.01.2016-ம் தேதி 12.00 மணியளவில் வாதி மேற்படி இடத்தைப் பார்க்கச் சென்றபோது எதிரி வாதியின் நண்பருடைய இடத்தில் அத்துமீறி நுழைந்து கம்பு, கொட்டகை கீற்று ஆகியவைகளை இறக்கி கொட்டகை போட முயற்சி செய்ததாகவும் அதை வாதி அவருடைய நண்பர்களான இப்ராஹிம் மற்றும் கமால் ஆகியோர்கள் போய் ஏன் இப்படி அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி அப்படிதாண்டா செய்வோம் போங்கடா தாயோழிகளா இந்த இடத்திற்குள் வந்தால் உங்கள் அனைவரையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று அருகில் இருக்கும் கம்பை காட்டி கொலை மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி தண்டிக்கக்கூடிய குற்றம் புரிந்தவர்களாகிறார் என்று மேலூர் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** இவ்வழக்கு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.81/2016-ஆக இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழான எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி, போதிய அவகாசம் கொடுத்து, எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 447, 294(b), 506(ii)-கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டுக்களுக்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 22.12.2016 அன்று எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் வாசித்து விளக்கி கேட்டபோது எதிரி குற்றத்தை மறுத்துரைத்துள்ளார். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

**3)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. வழக்கு விசாரணையின் போது, அ.சா.1-ன் மூலம் அ.சா.ஆ.1-ம், அ.சா.4-ன் மூலம் அ.சா.ஆ.2-ம், அ.சா.6-ன் மூலம் அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.5 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.09 06:11:20 +0530

எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4)** அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம் **:-**

**4.1)** அ.சா.1 கலிபுல்லா தனது சாட்சியத்தில் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 01.01.2016-ம் தேதி மதியம் 12.00 மணிக்கு சிவகங்கை பைபாஸ் ரோட்டில் முக்ரி என்பவரின் இடத்தில் சம்பவம் நடந்தது என்றும், தான் தன் கடையில் இருக்கும்போது தனது நண்பர் முக்ரி போனில் தொடர்பு கொண்டு அவருடைய இடத்திற்கு போகுமாறு சொன்னார் என்றும், தானும், தன் நண்பர் கமால்மைதீன், இப்ராஹிம் ஆகியோருடன் சம்பவ இடம் சென்று பார்த்தார்கள் என்றும், அங்கு விஜயகுமாரும் மேலும் 10 நபர்கள் முக்ரி என்பவரின் இடத்தில் கொட்டகை போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், தான் விஜயகுமாரிடம் ஏன் முக்ரி என்பவரின் இடத்தில் கொட்டகை போடுகிறீர்கள் என்று கேட்டார் என்றும், அதற்கு அவர் நீ எதற்கு கேட்கிறாய் என்று சொல்லி தாயோலி என்று கெட்ட வார்த்தையால் அசிங்கமாக பேசினார் என்றும், அதற்கு தான் அனாவசியமாக பேசக்கூடாது என்று சொன்னார் என்றும், எதிரி கொட்டகை போட வைத்திருந்த கடப்பாறை, அரிவாள் ஆகியவற்றை காட்டி ஓடிப்போய்டு இல்லையென்றால் கொல்லாமல் விடமாட்டேன் என்று விரட்டினார் என்றும், இரண்டு வாகனத்தில் சென்றிருந்த தாங்கள் ஒரு வாகனத்தை விட்டுவிட்டு மற்றொரு வாகனத்தில் காவல்நிலையம் சென்றார்கள் என்றும், எதிரி விரட்டியதால் ஒரு வாகனத்தை விட்டுவிட்டு சென்றார்கள் என்றும், போலீசில் தான் தான் புகார் கொடுத்தார் என்றும், தன்னிடம் காட்டப்படுவது தான், தான் கொடுத்த அ.சா.ஆ.1 புகார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.2)** அ.சா.2 கமால்மைதீன் தனது சாட்சியத்தில் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 01.01.2016-ம் தேதி பகல் 12 மணியளவில் மலம்பட்டி பைபாஸ் அருகில் முக்ரி என்பவர் இடத்தில் கொட்டகை போடுவதாக முக்ரி போன் மூலம் தகவல் கொடுத்தார் என்றும், தானும், கலிபுல்லா மற்றும் இப்ராஹிம் ஆகியோர் சம்பவ இடம் சென்று பார்த்தபோது எதிரி 10 நபர்களுடன் கொட்டகை போட்டுக்கொண்டிருந்தார் என்றும், தாங்கள் விஜயகுமாரிடம் சென்று ஏன் இந்த இடத்தில் கொட்டகை போடுகிறீர்கள் என்று கேட்டார்கள் என்றும், அதற்கு எதிரி அசிங்கமான கெட்டவார்த்தையால் பேசி இங்கே வரக்கூடாது என்று அரிவாள் கடப்பாறை மற்றும் மண்வெட்டி ஆகியவற்றை காட்டி உள்ளே வந்தால் வெட்டிவிடுவேன் என்று சொல்லி விரட்டிக்கொண்டு வந்தார் என்றும், தாங்கள் பயந்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.09 06:11:25 +0530

**4.3)** அ.சா.3 இப்ராஹிம் தனது சாட்சியத்தில் அ.சா.1-ஐ தெரியும் என்றும், எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 01.01.2016-ம் தேதி மதியம் 12.00 மணியளவில் தன் கடைக்கு பக்கத்தில் கலிபுல்லா மற்றும் கமால்மைதீனுடன் தான் பேசிக்கொண்டிருந்தபோது கலிபுல்லா என்பவருக்கு முக்ரி என்பவர் போன் செய்து, அவருடைய இடத்தில் யாரோ கொட்டகை போடுவதாகவும் அதை சென்று பார்க்குமாறும் கூறினார் என்றும், தான் கலிபுல்லா மற்றும் கமால்மைதீன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது விஜயகுமார் 10 நபர்களுடன் முக்ரி என்பவரின் இடத்தில் கொட்டகை போட்டுக்கொண்டிருந்தார் என்றும், அவரிடம் சென்று ஏன் முக்ரி இடத்தில் செட் போடுகிறீர்கள் என்று கேட்டார்கள் என்றும், அதற்கு எதிரி தங்களை அசிங்கமாக திட்டி, கொட்டகை போட வைத்திருந்த கடப்பாறை அரிவாள் ஆகியவற்றை வைத்து தாக்க வந்தார் என்றும், தாங்கள் பயந்து அங்கிருந்து ஓடி வந்து காவல்நிலையம் சென்றார்கள் என்றும், கலிபுல்லா புகார் கொடுத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.4)** அ.சா.4 அழகுபாண்டி தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக மலம்பட்டி செல்லும் வழியில் உள்ள பைபாஸ் ரோட்டில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வை மகஜரில் தானும், இளங்கோவன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.5)** அ.சா.5 இளங்கோவன் தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக சம்பவ இடத்தில் போலீசார் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வை மகஜரில் தானும், அழகுபாண்டி என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.6)** அ.சா.6 கலைச்செல்வி தனது சாட்சியத்தில் கடந்த 02.01.2016-ம் தேதி 2.15 மணிக்கு மேலூர் காவல்நிலைய சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது கலிபுல்லா என்பவர் கொடுத்த புகாரைப்பெற்று குற்ற எண்.4/2016, இ.த.ச பிரிவுகள் 147, 148, 447, 294(பி), 506(2)-ன் கீழ் வழக்கு பதிவு செய்தார் என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டு இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தார் என்றும், ஒரு நகலை

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.09 06:11:30 +0530

விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் அழகுபாண்டி மற்றும் இளங்கோவன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பின்னர் சம்பவ சாட்சிகளான கலிபுல்லா, கமால்மைதீன், இப்ராஹிம், அழகுபாண்டி மற்றும் இளங்கோவன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தார் என்றும், பின்னர் 03.01.2016-ம் தேதி 15.30 மணிக்கு மேலூர் பஸ் நிலையத்தில் வைத்து எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார் என்றும், 04.03.2016 அன்று சட்டப்பிரிவுகளை 447, 294(பி), 506(2) இ.த.ச வாக மாறுதல் செய்து அ.சா.ஆ.5 அறிக்கை தாக்கல் செய்தார் என்றும், அன்றைய தினமே வழக்கு விசாரணை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5)** <u>குற்றவியல் விசாரணை சட்டப்பிரிவு **313(1)**(ஆ)**-**ன் கீழான விசாரணை</u>

அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் விசாரணையிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்று அரசு தரப்பு சாட்சிகளை மறுத்துவிட்டு எதிரி அவரது தரப்பில் தாக்கல் செய்த வாக்குமூலத்தில் கடந்த 2015-ம் ஆண்டு நவம்பர் மாத்த்தில் எனது வீட்டிற்கு பின்புறம் உள்ள சர்வே எண்.354-ல் உள்ள இடத்தை சேர்ந்த முகம்மது யாசின் மற்றும் அவரது சகோதரர்கள் இருவரும் எனது வீட்டிற்கு வந்து நீ கட்டி குடியிருக்கும் வீடு என்னுடைய பட்டா இடத்தில் வருகிறது, வீட்டை முழுமையாக இடித்து இடத்தை கொடு இல்லையென்றால் இடத்திற்கு இன்றைய மதிப்பிற்கு பணத்தை கொடு என்று மிரட்டினார்கள் என்றும், புகார்தாரர் மற்றும் அவரது நெருங்கிய உறவினர்கள் நான் குடியிருக்கும் வீட்டை காலி செய்தால் முகமது யாசின் இடத்தை நல்ல விலைக்கு விற்பனை செய்யலாம் என்று என்னி என்னை தொடர்ந்து பிரச்சனை செய்து வந்தார்கள், புகார்தாரரும் மற்ற சாட்சிகளும் சொல்லுவதுபோல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என் மீது பொய்யான புகாரை கொடுத்துள்ளார்கள் என்று எதிரி தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் தரப்பில் சாட்சிகள் உண்டா என வினவியபோது சாட்சிகள் இல்லை என்று சொன்னார். அதனால் எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.09 06:11:35 +0530

**6) அரசு தரப்பு வாதம் பின்வருமாறு:**

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி தான் குற்றம் புரிந்துள்ளார் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி மீது உள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு எடுத்துரைத்தார்.

**7) எதிரி தரப்பில் வாதம் பின்வருமாறு:**

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே எதிரி மீது உள்ள குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**8) தீர்வு :-**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அனைத்து வழக்காவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

**9)** அரசு தரப்பு வழக்குப்படி, இவ்வழக்கின் வாதி ஹலிபுல்லாவின் நண்பர் ஜமாலியா முகமது முக்ரின் என்பவரின் இடத்தை எதிரி 01.01.2016-ம் தேதி 12.00 மணியளவில் வாதி மேற்படி இடத்தைப் பார்க்கச் சென்றபோது எதிரி வாதியின் நண்பருடைய இடத்தில் அத்துமீறி நுழைந்து கம்பு, கொட்டகை கீற்று ஆகியவைகளை இறக்கி கொட்டகை போட முயற்சி செய்ததாகவும் அதை வாதி அவருடைய நண்பர்களான இப்ராஹிம் மற்றும் கமால் ஆகியோர்கள் போய் ஏன் இப்படி அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி அப்படிதாண்டா செய்வோம் போங்கடா தாயோழிகளா இந்த இடத்திற்குள் வந்தால் உங்கள் அனைவரையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று அருகில் இருக்கும் கம்பை காட்டி கொலை மிரட்டல் விடுத்த குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**10) இ.த.ச பிரிவு 447-ன் கீழ்**

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.09 06:11:39 +0530

இந்திய தண்டனைச் சட்டம் (IPC) பிரிவு 441 மற்றும் அது தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள்:

இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 441: குற்றமுற்ற அத்துமீறல் (Criminal Trespass)

"441. குற்றமுற்ற அத்துமீறல் - ஒரு குற்றத்தைச் செய்வதற்கோ அல்லது அத்தகைய சொத்தினைத் தன் வசம் வைத்திருக்கும் எவரொருவரையும் பயமுறுத்தவோ, அவமதிக்கவோ அல்லது எரிச்சலூட்டவோ செய்யும் நோக்கத்துடன், மற்றொருவரின் வசமுள்ள சொத்தினுள் அல்லது அதன் மேல் எவரொருவர் நுழைகிறாரோ, அல்லது அத்தகைய சொத்தினுள் சட்டபூர்வமாக நுழைந்துவிட்டு, அங்குள்ள எவரையும் பயமுறுத்த, அவமதிக்க அல்லது எரிச்சலூட்ட அல்லது ஒரு குற்றத்தைச் செய்யும் நோக்கத்துடன் சட்டவிரோதமாக அங்கேயே தங்கியிருக்கிறாரோ, அவர் 'குற்றமுற்ற அத்துமீறல்' புரிந்ததாகக் கருதப்படுவார். இ.த.ச பிரிவு 441-ன் கீழ் செய்யப்படும் குற்றத்திற்கான தண்டனைப் பிரிவு, பிரிவு 447 ஆகும்."

மாத்ரி மற்றும் பலர் **v.** பஞ்சாப் மாநிலம் **[AIR 1964 (SC) 986]**

இ.த.ச பிரிவு 441-ஐ விளக்கி, மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பின்வருமாறு கூறியுள்ளது:

"18. ...சட்டத்தின் சரியான நிலைப்பாடு எரிச்சலூட்டும், பயமுறுத்தும் அல்லது அவமதிக்கும் நோக்கத்துடன் ஒரு சொத்துக்குள் நுழைந்ததை நிலைநாட்ட, அத்தகைய எரிச்சல், பயமுறுத்தல் அல்லது அவமதிப்பை ஏற்படுத்துவதே அந்த நுழைவின் முக்கிய நோக்கமாக (Aim) இருந்தது என்பதில் நீதிமன்றம் திருப்தி அடைய வேண்டியது அவசியமாகும். அந்த நுழைவின் இயல்பான விளைவு (Natural consequence) எரிச்சல், பயமுறுத்தல் அல்லது அவமதிப்பாக இருக்கக்கூடும் என்பதும், அத்தகைய விளைவு நுழையும் நபர்களுக்குத் தெரிந்திருந்தது என்பதும் மட்டுமே அந்த நோக்கத்தை நிரூபிக்கப் போதுமானதல்ல. அத்துமீறி நுழைந்ததன் நோக்கம் எரிச்சல், பயமுறுத்தல் அல்லது அவமதிப்பை ஏற்படுத்துவதா என்பதைத் தீர்மானிக்கும்போது, அத்தகைய விளைவுகள் ஏற்படும் என்ற எண்ணம் இருந்ததா என்பதையும், அதே சமயம் அந்த நுழைவைத் தூண்டிய முதன்மை நோக்கம் (Dominant intention) அத்தகைய பயமுறுத்தல், அவமதிப்பு அல்லது எரிச்சலைத் தவிர்த்து வேறொன்றாக இருக்க வாய்ப்புள்ளதா என்பதையும் உள்ளிட்ட அனைத்துச் சூழ்நிலைகளையும் நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டும்."

ராஜேந்தர் மற்றும் பலர் **v.** ஹரியானா மாநிலம் **[1995 KHC 1319]**

ராஜேந்தர் மற்றும் பலர் வழக்கில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் அந்த நிலைப்பாட்டைப்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.09 06:11:44 +0530

பின்வருமாறு மீண்டும் வலியுறுத்தியது:

"23. மேற்கூறிய சட்டப்பிரிவிலிருந்து இது தெளிவாகிறது. மற்றொருவரின் வசமுள்ள சொத்தினுள் அதிகாரமில்லாமல் நுழைவது அல்லது சட்டபூர்வமாக நுழைந்துவிட்டு சட்டவிரோதமாக அங்கேயே தங்கியிருப்பது 'குற்றமுற்ற அத்துமீறல்' என்ற வரையறைக்குள் வரும். ஆனால், அத்தகைய நுழைவு அல்லது தங்கியிருப்பது ஒரு குற்றத்தைச் செய்யும் நோக்கத்துடன் அல்லது அந்தச் சொத்தினைத் தன் வசம் வைத்துள்ள நபரைப் பயமுறுத்த, அவமதிக்க அல்லது எரிச்சலூட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் இருந்தால் மட்டுமே அது குற்றமாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதனால், பிரிவு 441-ல்குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களில் ஏதேனும் ஒன்று நிரூபிக்கப்பட்டால் ஒழிய, குற்றமுற்ற அத்துமீறல் புரிந்ததாகக் கருத முடியாது. சொல்லத் தேவையில்லை, அத்தகைய நோக்கம் ஒரு குறிப்பிட்ட வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளிலிருந்து சேகரிக்கப்பட வேண்டும்.

“24. மேற்கூறிய கொள்கைகளின் வெளிச்சத்தில் ஆராயும்போது, புகார்தாரர் தரப்பினர் 'குற்றமுற்ற அத்துமீ றல்' புரிந்ததாகக் கூற முடியாது. ஏனெனில், அவர்கள் எதிரி தரப்பினரின் வசமிருந்த சர்ச்சைக்குரிய நிலத்திற்குள் அதிகாரமில்லாமல் நுழைந்தது, அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு வலியுறுத்துவதற்காகவே அன்றி, எந்தவொரு குற்றத்தைச் செய்யும் நோக்கத்துடனோ அல்லது அவர்களை அவமதிக்கவோ, பயமுறுத்தவோ அல்லது எரிச்சலூட்டவோ அல்ல. உண்மையில், அத்தகைய நோக்கம் இருந்ததாக ஊகிக்க கோப்பில் ஒரு சிறு ஆதாரம் கூட இல்லை. அதன் அர்த்தம் என்னவென்றால், எதிரி தரப்பினருக்கு அக்கொலைவெறித் தாக்குதலைத் தொடுப்பதற்குச் சொத்து குறித்த தனிநபர் பாதுகாப்பு உரிமை (Right of private defence) ஏதும் இல்லை என்பதாகும். மாறாக, அத்தகைய கொலைவெறித் தாக்குதலானது, புகார்தாரர் தரப்பினருக்குத் தற்காப்புக்காகப் பதிலடி கொடுக்கும் உரிமையை வழங்கியதோடு மட்டுமல்லாமல், எதிரி தரப்பினர் தங்களது உடல் குறித்த தனிநபர் பாதுகாப்பு உரிமையைக் கோருவதற்கும் தகுதியற்றவர்களாக்கிவிட்டது.”

**11)** மேற்படி மாத்ரி மற்றும் ராஜேந்திரன் ஆகிய வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்பின் நெறியின்படி குற்றம் சாட்டப்பட்டவர் அந்த சொத்தினை தன் வசம் வைத்திருக்கும் எவரேனும் ஒருவரையும், பயமுறுத்தவோ, அவமதிக்கவோ அல்லது எரிச்சல் ஊட்டும் நோக்கத்துடன் அந்த

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.09 06:11:49 +0530

இடத்திற்குள் நுழைந்தார் என்று அரசு தரப்பில் நிரூபிப்பது அவசியமாகும்.

**12)** இவ்வழக்கில் அ.சா.1 கலிபுல்லா தனது சாட்சியத்தில் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 01.01.2016-ம் தேதி மதியம் 12.00 மணிக்கு சிவகங்கை பைபாஸ் ரோட்டில் முக்ரி என்பவரின் இடத்தில் சம்பவம் நடந்தது என்றும், தான் தன் கடையில் இருக்கும்போது தனது நண்பர் முக்ரி போனில் தொடர்பு கொண்டு அவருடைய இடத்திற்கு போகுமாறு சொன்னார் என்றும், தானும், தன் நண்பர் கமால்மைதீன், இப்ராஹிம் ஆகியோருடன் சம்பவ இடம் சென்று பார்த்தார்கள் என்றும், அங்கு விஜயகுமாரும் மேலும் 10 நபர்கள் முக்ரி என்பவரின் இடத்தில் கொட்டகை போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், தான் விஜயகுமாரிடம் ஏன் முக்ரி என்பவரின் இடத்தில் கொட்டகை போடுகிறீர்கள் என்று கேட்டார் என்றும், அதற்கு அவர் நீ எதற்கு கேட்கிறாய் என்று சொல்லி தாயோலி என்று கெட்ட வார்த்தையால் அசிங்கமாக பேசினார் என்றும், அதற்கு தான் அனாவசியமாக பேசக்கூடாது என்று சொன்னார் என்றும், எதிரி கொட்டகை போட வைத்திருந்த கடப்பாறை, அரிவாள் ஆகியவற்றை காட்டி ஓடிப்போய்டு இல்லையென்றால் கொல்லாமல் விடமாட்டேன் என்று விரட்டினார் என்றும், இரண்டு வாகனத்தில் சென்றிருந்த தாங்கள் ஒரு வாகனத்தை விட்டுவிட்டு மற்றொரு வாகனத்தில் காவல்நிலையம் சென்றார்கள் என்றும், எதிரி விரட்டியதால் ஒரு வாகனத்தை விட்டுவிட்டு சென்றார்கள் என்றும், போலீசில் தான் தான் புகார் கொடுத்தார் என்றும், தன்னிடம் காட்டப்படுவது தான், தான் கொடுத்த அ.சா.ஆ.1 புகார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** இதை தொடர்ந்து அ.சா.2 மற்றும் அ.சா.3 தங்களது சாட்சியத்தில் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 01.01.2016-ம் தேதி பகல் 12 மணியளவில் மலம்பட்டி பைபாஸ் அருகில் முக்ரி என்பவர் இடத்தில் கொட்டகை போடுவதாக முக்ரி போன் மூலம் தகவல் கொடுத்தார் என்றும், தானும், கலிபுல்லா மற்றும் இப்ராஹிம் ஆகியோர் சம்பவ இடம் சென்று பார்த்தபோது எதிரி 10 நபர்களுடன் கொட்டகை போட்டுக்கொண்டிருந்தார் என்றும், தாங்கள் விஜயகுமாரிடம் சென்று ஏன் இந்த இடத்தில் கொட்டகை போடுகிறீர்கள் என்று கேட்டார்கள் என்றும், அதற்கு எதிரி அசிங்கமான கெட்டவார்த்தையால் பேசி இங்கே வரக்கூடாது என்று அரிவாள் கடப்பாறை மற்றும் மண்வெட்டி ஆகியவற்றை காட்டி உள்ளே வந்தால் வெட்டிவிடுவேன் என்று சொல்லி விரட்டிக்கொண்டு வந்தார் என்றும், தாங்கள் பயந்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.09 06:11:54 +0530

**14)** எனவே அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகளின் அடிப்படையிலும் அவர்களது நண்பரான ஜமாலிய முகமது முக்ரின் என்பவரது இடத்திற்குள் எதிரி விஜயகுமாரும், மேலும் 10 நபர்களும் அத்துமீறி நுழைந்து கொட்டகை போட்டுக்கொண்டிருந்ததாக சாட்சியம் அமைந்துள்ளது. மேலும் எதிரியை சாட்சிகள் தடுத்து நிறுத்த முயன்றபோது கொட்டகை போட வைத்திருந்த கடப்பாறை, அருவாள் ஆகியவற்றை காட்டி மிரட்டியதாக சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.6 பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடமான அ.சா.ஆ.4-ல் அவ்வாறு கொட்டகை அமைத்ததாகவோ அல்லது கொட்டகை அமைக்க பொருட்கள் சம்பவ இடத்தில் இருந்ததாகவோ எந்தவொரு குறிப்பும் இல்லை. மேலும் இவ்வழக்கில் கொட்டகை போட பயன்படுத்திய பொருட்களை அரசு தரப்பில் கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சம்பவத்தின்போது எதிரியுடன் 10 நபர்களும் இருந்ததாக சாட்சிகள் சொல்லியுள்ள நிலையில் அவ்வாறு எதிரியை தவிர வேறு எந்த நபரையும் இந்த வழக்கில் புலன்விசாரணை அதிகாரி கைது செய்ததாகவோ அல்லது சந்தேகப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தியதாகவோ எந்தவொரு ஆவணமும் இல்லை.

**15)** மேலும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் உரிமையாளரான ஜமாலிய முகமது முக்ரின் என்பவரை புலன்விசாரணை அதிகாரி விசாரணை செய்யவில்லை. மேலும் அவரை இவ்வழக்கில் அரசு தரப்பில் சாட்சியாக முன்னிலைப்படுத்தவில்லை. எனவே எதிரி, ஜமாலிய முகமது முக்ரின் என்பவரின் இடத்திற்குள் அத்துமீறி நுழைந்து, கொட்டகை அமைத்ததாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**16)** பொதுவாக ஒரு நபருக்கு எதிராக இதச பிரிவு 294(பி) குற்றச்சாட்டு நிருபிக்கப்படவேண்டுமென்றால், அந்த நபர் பயன்படுத்திய ஆபாசமான வார்த்தைகள் மற்றவர்களுக்கு ஒழுக்ககேடான தாக்கங்களுக்கு உட்பட்டிருக்கவேண்டும் என்றும், அவருக்கு அருவருப்பான எரிச்சலூட்டும் வகையில் அந்த சொற்கள் இருந்திருக்கவேண்டும் என்றும் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டிருக்கவேண்டும். மேலும், **P.T.Chacko Vs Nainan 1967 KLT 799** என்ற வழக்கில் உச்சநீதிமன்றமானது கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

*“To prove the offence under section 294 of IPC mere utternance of obscene words are not suffient but there must be a further proof to establish that it was to b e annonyance of others, it is lacking in this case. No one has spokent about the obscene words, they felt annoyed and in the absence of legal evidence to show that the words uttered by the*

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.09 06:11:59 +0530

*appellant accused annoyed others, it can not be said the ingriedients of offence u/s.294(b) of IPC is made out".*

**17)** மேற்படி மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் காணும்போது, இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.3ஐ எதிரி அசிங்கமாக பேசி அது மற்றவர்களுக்கு எரிச்சலூட்டும் வகையிலும், அருவருக்கத்தக்க வகையிலும் இருந்ததாக இந்த வழக்கின் புகார் மனு உட்பட எந்த சாட்சியத்திலும் காணப்படவில்லை. மேலும், இ.த.ச.பிரிவு 294(b)-ன் படி, எதிரி பொது இடத்தில் வைத்து ஆபாச சொற்களால் அ.சா.1 முதல் அ.சா.3ஐ வசைபாடியிருக்கவேண்டும்.

**18)** மேலும், எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவு 506(2)ன் கீழான குற்றச்சாட்டை காணும்போது, சம்பவத்தின்போது எதிரி அ.சா.1 முதல் அ.சா.3ஐ கொன்றுவிடுவதாக மிரட்டியதாக அரசு தரப்பு வழக்காகும்.

**19)** மேலும், **Manik Taneja Vs State of Karnataka 2015 (7) SCC 423** என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றமானது குற்றவியல் மிரட்டல் என்ற பதத்திற்கு கீழ்க்கண்டவாறு பொருள் கண்டுள்ளது.

**"** *The threat must be with intention to cause alaram to the complainant to cause that person to do or omit to do any work mere expression of any words without any intention to cause alaram would not be sufficient to bring in the applicaition of section 503 of IPC "*

இந்த வழக்கில் எதிரி அ.சா.1 முதல் அ.சா.3ஐ கொலை மிரட்டல் விடுத்தார் என்ற வாசகத்தை தவிர அந்த கொலை மிரட்டல் அ.சா.1 முதல் அ.சா.3-க்கு எச்சரிக்கையுடன் கூடிய அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கில் இருந்தது என்றும், அதன் மூலம் அ.சா.1 முதல் அ.சா.3 மிகுந்த அச்சமடைந்து அவர் செய்யக்கூடிய வேலையை செய்ய தவிர்த்துவிட்டதாக எந்த சாட்சியமும் காணப்படவில்லை. எனவே, எதிரி மிரட்டியதாக சொல்லப்படுவதற்கு பயந்து அ.சா.1 முதல் அ.சா.3 எங்கும் செல்லாமல் அச்சமுற்று இருந்தாக புலப்படவில்லை என்பதால் எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவு 506(2)-ன் கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**20)** எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.09 06:12:05 +0530

எதிரிக்கு அளித்து அவரை விடுதலை செய்வதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்குமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**21)** முடிவாக, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 447, 294(b), 506(ii) இ.த.ச-ன் கீழான குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி பிரிவுகள் 447, 294(b), 506(ii) இ.த.ச-ன் கீழ் குற்றாவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**22)** இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**23)** மேலும் எதிரி குவிமுச பிரிவு 437(A)ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026- ம் ஆண்டு மார்ச் மாதம் 09-ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.09 06:12:11 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>இணைப்பு</u>

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> :-

| வரிசை எண் | விசாரிக்கப்பட்ட தேதி | சாட்சிகளின் பெயர்கள் |
|---|---|---|
| அ.சா.1 | 10.04.2018 | கலிபுல்லா |
| அ.சா.2 | 10.04.2018 | கமால்மைதீன் |
| அ.சா.3 | 10.04.2018 | இப்ராஹிம் |
| அ.சா.4 | 10.04.2018 | அழகுபாண்டி |
| அ.சா.5 | 10.04.2018 | இளங்கோவன் |
| அ.சா.6 | 15.10.2018 | கலைச்செல்வி |

<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u> :-

| வரிசை எண் | குறியீடு செய்த சாட்சி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | அ.சா.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | அ.சா.4 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | அ.சா.6 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | அ.சா.6 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | அ.சா.6 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | அ.சா.5 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.5-ன் 2-ம் சாட்சி கையொப்பம் |

<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்:- இல்லை</u>

<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> - இல்லை

<u>குறியீடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>**:** இல்லை

<u>குறிப்பு</u>

1) வழக்கு விசாரணைகாலத்தில், எதிரி நீதிமன்ற பிணையிலிருந்துள்ளார்.

2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது

4) தீர்ப்பின் நகல், மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.09 06:12:15 +0530